பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை – 4

20 06 2024 12 40

வியாழக்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் கள்ளச்சாராய சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண உதவி அளிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
   இந்த சம்பவத்திற்கு தமிழக அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

2. யுஜிசி தேசியத் தகுதித் தேர்வு முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. ஜம்மு-கஷ்மீரில் 3 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

4. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

5. உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<< >>>>

கள்ளக்குறிச்சி விஷச் சாராய மரணம் தொடர்பாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் திரு. முத்துசாமி, திரு. பொன்முடி, திரு. எ.வ. வேலு ஆகியோர் கலந்துகொண்டனர்.

காவல்துறை தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கள்ளச்சாராயம் தொடர்பான கண்காணிப்பு பணிகள், தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர், கள்ளக்குறிச்சி சம்பவத்தில் குற்றச் செயலில் ஈடுபட்ட 4 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் அரசு நிதி உதவி அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இச்த சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்படுவதாகவும், இந்த ஆணையம் 3 மாத காலத்திற்குள் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாவண்ணம் தடுக்கக்கூடிய பரிந்துரைகளையும் இந்த ஆணையம் வழங்க வேண்டும் என்றும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி உள்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் காவல்துறை இயக்குநர் ஆகியோர் 2 தினங்களில் தங்களது அறிக்கையை வழங்குவார்கள் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. விசாரணை அதிகாரியான ஏ.டி.எஸ்.பி. கோமதி தலைமையிலான குழுவினர் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இதனிடையே இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36ஆக அதிகரித்துள்ளது.

<<<< >>>>

கள்ளக்குறிச்சியில் நிகழ்ந்த விஷச்சாராய உயிரிழப்புகள் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் புழக்கத்தைத் தடுக்க மாநில அரசு தவறி விட்டதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல் முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

கள்ளச்சாராய விற்பனையை தடுக்க வலியுறுத்தி ஜூன் 22ஆம் தேதி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழக பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி, கள்ளக்குறிச்சிக்கு நேரில் சென்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், அதிகாரிகளும், அரசு நிர்வாகமும் இந்த கள்ளச்சாராய விற்பனையை தடுக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

திமுக அரசின் ஒட்டுமொத்த நிர்வாக தோல்வியாலும், மெத்தனப்போக்காலும் கள்ளக்குறிச்சி சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும், இதற்கு தமிழக அரசு பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த முடியாமல் காவல்துறையும், தமிழக அரசும் செயலிழந்துள்ளதாக பாமக நிறுவனர் திரு. ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருள் விற்பனையால் தமிழகமே தள்ளாடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கள்ளச்சாராய விற்பனையை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்றும், அரசால் நடத்தப்படும் மதுக்கடைகளை படிப்படியாக மூட வேண்டும் என்றும் மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோ வலியுறுத்தியுள்ளார்.

<<<< >>>>

யுஜிசி தேசியத் தகுதித் தேர்வு முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்த தேர்வில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக தேசிய இணையதள குற்ற ஆய்வுப் பிரிவு தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் இந்தத் தேர்வு ரத்து செய்யப்படுவதாக மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்திருந்தது.

மீண்டும் புதிதாக தேர்வு நடத்தப்படும் என்றும் அதற்கான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடத்துக்குத் தகுதி பெறுவதற்கும், ஆராய்ச்சி உதவித் தொகை பெறுவதற்கும் தேசிய தேர்வு முகமையால் இந்தத் தேர்வு நடத்தப்படுகிறது.

<<<< >>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக இன்று ஜம்மு காஷ்மீர் செல்கிறார்.

இன்று மாலை 6 மணி அளவில் ஸ்ரீநகரில் நடைபெறும் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல், ஜம்மு-கஷ்மீரின் வளர்ச்சி என்ற நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான 84 புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

மேலும் வேளாண் பணிகளை மேம்படுத்தும் விதத்தில் ஆயித்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

அரசு பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட இரண்டாயிரததுக்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளையும் திரு நரேந்திரமோடி வழங்குகிறார்.

சர்வதேச யோகா தினத்தையொட்டி நாளை காலை 6.30 மணிக்கு ஸ்ரீநகரில் நடைபெறும் யோகாசன நிகழ்ச்சியில் திரு. நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

அதன் பின்னர் பொதுமக்களிடம் பிரதமர் உரையாற்றுகிறார்.

<<<< >>>>

குடியரசுத் தலைவர் திருமதி திஊெரபதி முர்மு-வின் பிறந்த நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் நேரில் சென்று தமது வாழ்த்துகளை தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பொது வாழ்க்கையில் மிகச் சிறந்த பங்களிப்பை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு அளித்துள்ளதாகவும், அவர் நீண்ட காலம் மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியத்துடன் வாழ தாம் வாழ்த்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்வின் அர்ப்பணிப்பும், சேவையும் நாட்டு மக்கள் அனைவருக்கும் உத்வேகத்தை அளிக்கக்கூடியதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் ஏழை மற்றும் விளிம்பு நிலை மக்களுக்காக தொடர்ந்து பாடுபட்டு வருவதையும் அவர் அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

<<<< >>>>

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

இந்தக் கூட்டத் தொடரில் மானியக் கோரிக்கை மீதான விவாதங்கள் நடைபெறுகின்றன.

இன்றைய கூட்டத்தில் மறைந்த முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பன், சமீபத்தில் காலமான விக்கிரவாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் புகழேந்தி உள்ளிட்டோருக்கு இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் கள்ளக்குறிச்சியில் விஷச்சாராயம் அருந்தி இறந்தவர்களுக்கும், சட்டப்பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

குவைத் தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் இன்றைய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. நாளை காலை மீண்டும் சட்டப்பேரவை கூடுகிறது.

<<<< >>>>

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் உள்ள கடற்படைப் பயிற்சி நிலையத்தில் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் ஆய்வு செய்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் திருமதி வளர்மதி., மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோர் அமைச்சரை வரவேற்றனர்.

<<<< >>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டு வரும் நிதியுதவி தங்களுக்கு பயனளிப்பதாக உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்து வருகின்றனர்.

ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இரு விவசாயிகள் இந்தத் திட்டத்தின் மூலம் தாங்கள் பயன்பெற்று வருவதாக கூறியுள்ளனர்.

<<<< >>>>

தமிழக கடலோர பகுதிகளில் 'சாகர் கவச்' பாதுகாப்பு ஒத்திகை இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறுகிறது.

<<<< >>>>

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

பிரிட்ஜ்டவுனில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

--------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 1-6, 6-2 என்ற செட் கணக்கில் ஹாங்காங்கின் **Hong Yi Wong**-ஐ வென்றார்.

-------------

ஸ்பெயின் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் காலிறுதிச் சுற்றில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே இன்று சீனாவின் **Fangran Tian**-ஐ எதிர்கொள்கிறார்.

---------------

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஃபிலிப்பைன்சை எதிர்கொள்கிறது.

<<<<>>>>